



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 222 04.2.2026 WEDNESDAY THAI : 21 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 222 04.2.2026 புதன்கிழமை தை : 21 விலை : ரூ.5/-


## சட்டசபை தேர்தலில்

# "மக்கள் பாடம் கற்பிப்பார்கள்!"

## முதல்வர் ஸ்டாலின் பேட்டி

சென்னை: பிப்.4-

மத்திய பட்ஜெட்டில் தமிழக மக்களுக்கு ஏமாற்றம் தான். வரும் சட்டசபை தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை கொளத்தூரில் நிருபர்களை முதல்வர் ஸ்டாலின் சந்தித்தார். அதன் விபரம் பின்வருமாறு:

கேள்வி: மத்திய பட்ஜெட்டின் முழு விபரம் வெளியாகி இருக்கிறது. இதனை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

முதல்வர் ஸ்டாலின்: அதான் ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன். மத்திய பட்ஜெட்டில் தமிழக மக்களுக்கு ஏமாற்றம் தான். மாற்றம் வருமா என்று பார்த்தோம்



எந்த மாற்றமும் இல்லை. எங்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்து இருக்கிறது.

கேள்வி: தமிழகத்தில் இந்தாண்டு தேர்தல் நடக்க உள்ள நிலையிலும், ஆனால் பெரிதும் ஏதும் திட்டங்கள் பட்ஜெட்டில் இடம் பெறவில்லையே?

முதல்வர் ஸ்டாலின்: வரும் சட்டசபை தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்.

கேள்வி: கூட்டணி தொகுதி பங்கீடு பேச்சு எப்போது தொடங்கும்?முதல்வர் ஸ்டாலின்: விரைவில் தொடங்கும்

கேள்வி: அரசியலில் புதிய எதிரிகள் வந்துள்ளார்களா?

முதல்வர் ஸ்டாலின்: நான் யாரையும் எதிரியாக பார்ப்பதில்லை. அனைவரையும் நண்பர்களாக தான் பார்க்கிறேன். மதிக்கிறேன்



■ தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 4வது பொதிகை புத்தகத் திருவிழாவின் 5 வது நாள் நிகழ்வாக மாவட்ட படையாளுமை இரசிகமணி டி.கே.சி. அரங்கில் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

## அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு பாதகமா?

### எம்.பி.க்கள் எதிர்ப்பும், நட்டா பதிலும்

புதுடெல்லி: பிப்.4-

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மத்திய அரசு தானாக முன்வந்து விரிவான அறிக்கையை வெளியிடும் என்றும், நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தும் என்றும் மத்திய அமைச்சர் ஜெ.பி.நட்டா உறுதி அளித்துள்ளார்.

இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் கேள்விகளை எழப்பினர்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திக் கொள்வதாக பிரதமர் மோடி உறுதி அளித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறி இருப்பது குறித்து கேள்வி எழுப்பிய அவர்கள், அமெரிக்காவிடம் இருந்து விவசாயப் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்யும் என்ற அறிவிப்புக்கும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும், வரி மற்றும் வரி அல்லாத தடைகளை இந்தியா பூஜ்ஜியமாக மாற்றும் என ட்ரம்ப் கூறி இருப்பது குறித்தும் அவர்கள் விமர்சித்தனர்.

'அமெரிக்கா உடனான இந்திய வர்த்தக ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கு பாதகமே' என விமர்சிக்கும் வகையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் அவையில் பேசிய மத்திய அமைச்சர் ஜெ.பி. நட்டா, ''அமெரிக்க அதிபர் நேற்று இரவு வரிகள் குறித்து சமூக ஊடக பதிவு ஒன்றை வெளியிட்டு, அதில் பிரதமர் மோடியை தனது உண்மையான நண்பர் என குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிறகு, பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்தும் வர்த்தகம் குறித்தும் குறிப்பிட்டு எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இந்த வர்த்தக ஒப்பந்தம்



குறித்து அரசாங்கம் தானாக முன்வந்து ஓர் அறிக்கையை வெளியிடும். மேலும், இது குறித்து விவாதமும் நடத்தும்'' என்று தெரிவித்தார்.

அதேநேரத்தில், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் பேசும்போது, ''அரசாங்கம் விரிவான அறிக்கை கொடுக்கத் தயாராக இருக்கும்போது, காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணி எம்பிக்களின் இந்த அணுகுமுறை தவறானது. அவர்களின் வழிமுறை ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இது ஒரு பொறுப்பற்ற நடத்தை. இது அவர்களின் விரக்தியின் வெளிப்பாடு'' என குற்றம் சாட்டினார்.

முன்னதாக, வரி மற்றும் வரி இல்லாத தடைகளை இந்தியா குறைக்கும் என்ற அமெரிக்காவின் அறிவிப்பு தொடர்பாக விவாதம் நடத்தக் கோரி காங்கிரஸ் எம்பி கே.சி.வேணுகோபால் மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்தார்.

மற்றொரு காங்கிரஸ் எம்பி ரன்தீப் சிங் சுர்ஜேவாலா, ''அமெரிக்க இந்திய வர்த்தக ஒப்பந்தம் குறித்து மாநிலங்களவையில் விவாதம் நடத்தப்பட வேண்டும். இதில் இந்திய விவசாயிகளுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது'' என குற்றம் சாட்டினார்.

இதனிடையே, நாடாளுமன்ற வளாகத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறும்போது, ''பிரதமர் நரேந்திர மோடி நாட்டை விற்றுவிட்டார். அவர் கலக்கமடைந்துள்ளார். கடந்த சில மாதங்களாக முடங்கிக் கிடந்த இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் மோடி நேற்று இரவு கையெழுத்திட்டார். அவர் மீது கடுமையான அழுத்தம் உள்ளது. இதனால், மோடியின் பிம்பம் சேதமடையக்கூடும்.

பிரதமர் மோடி சமரசத்துக்கு உள்ளாகியிருப்பதால், இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயிகளின் கடும் உழைப்பை விற்றுவிட்டார். அவர் நாட்டை விற்றுவிட்டார். பிரதமர் நரேந்திர மோடி பயப்படுகிறார், ஏனென்றால் அவருடைய பிம்பத்தை உருவாக்கியவர்களே இப்போது அந்த பிம்பத்தை உடைக்கின்றனர். தொழிலதிபர் அதானி மீது அமெரிக்காவில் ஒரு வழக்கு உள்ளது. அது உண்மையில் பிரதமர் மோடி மீதான வழக்குதான்.

எப்ஸ்டீன் கோப்புகளில் அமெரிக்கா இன்னும் வெளியிடாத பல விஷயங்கள் உள்ளன. அதன் காரணமாகவும் அழுத்தங்கள் உள்ளன. இவைதான் அந்த இரண்டு அழுத்த புள்ளிகள் என்று நம்புகிறேன். இதை நாடு புரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை மகிழ்விக்கவும், சமாதானப்படுத்தவும் அவரிடம் முழுமையாக சரண் அடைந்து விட்டார் மோடி'' என்று ராகுல் காந்தி கூறினார்.

## பேரறிஞர் அண்ணா 57வது நினைவு தினம் அமைச்சர் ஐ.பெரியசாமி : கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் மவுன ஊர்வலம்

சின்னாளபட்டி, பிப்.4

மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மணிக்கூண்டிலிருந்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மற்றும் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் திமுகவினர் மணிக்கூண்;டிலிருந்து மவுன ஊர்வலமாக வந்து திண்டுக்கல் தலைமை மருத்துவ மனை அருகே உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



நிருபர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், முதலில் விஜய் அரசியலுக்கு வரட்டும், வீட்டிலேயே முடங்கி கிடப்பவர் அரசியல் பேசக்கூடாது. சினிமா அரசியல் மக்கள் மத்தியில் எடுபடாது. நாங்கள் (திமுக) அனைத்து அரசியலையும் பார்த்தவர்கள். இன்று இந்தியாவிலேயே சாதனை நாயகனாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார். ஏகோபித்த மக்கள் ஆதரவு தமிழகத்தில் 70 சதவீதம் திமுகவிற்கு உள்ளது. கரூர் சம்பவத்திற்கு நேரில் வந்து ஆறுதல் சொல்லாத நடிகர் விஜய் எப்படி மக்களுக்கு நல்லது செய்வார். 41 பேர் இறந்ததற்கு ஆறுதல் சொல்ல வராதவர் எப்படி 7 கோடி மக்களை காப்பாற்றுவார். விஜய் நடித்து பார்க்கிறார், டான்ஸ் ஆடி பார்க்கிறார், ஒன்றும் செல்லுபடியாகாது, இந்த டான்ஸ் எல்லாம் பழைய டான்ஸ், மக்களுக்கிட்ட செல்லாது.

தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெறும். முதல்வர் பதவி போன பின்பு மக்களை சந்திக்காத எடப்பாடி பழனிச்சாமி, நான்கரை வருடம் கழித்து மக்களை சந்திக்கிறார். இதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மீண்டும் கழகத் தலைவர் தளபதியார் தலைமையில்தான் ஆட்சி அமையும், இது உறுதி என்றார். நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட தி.மு.க அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாநகர செயலாளரும், துணை மேயருமான ச.ராஜப்பா, திண்டுக்கல் மேயர் இளமதிஜோதி பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ப.க.சிவகுருசாமி, பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பாப்பாத்தி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதம்பாள்ஆல்பர்ட், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியாளர் சங்கம் இன்று அடையாள வேலை நிறுத்தம்!

சென்னை: பிப்.4-

10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியாளர் சங்கத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் பிப்.4ம் தேதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் சி.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பொறியியல் பிரிவில் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள உதவி பொறியாளர் பணியிடங்களை அரசுக்கு ஒப்படைப்பு செய்ய கூடாது. மாவட்ட அளவில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வக அலுவலர்களை நியமித்து, அவர்களை உதவி செயற்பொறியாளர் தலைமையில் பணியாற்ற உரிய உத்தரவு வழங்க வேண்டும்.

இரண்டு ஊராட்சிகளுக்கு ஒரு உதவி செயற்பொறியாளர் பணியிடம் உருவாக்க வேண்டும். பணிகளை நுண்ணிய அளவில் கண்காணிக்கவும் மதிப்பீடுகளை அந்தந்த மாவட்ட அளவில் ஒப்புதல் வழங்கி விரைந்து பணிகளை முடிக்க 3 மாவட்டங்களுக்கு ஒரு மண்டல மேற்பார்வை பொறியாளர் பணியிடம் உருவாக்க வேண்டும்.

நகர கட்டமைப்பில் உள்ளது போல் கிராம பகுதிகளிலும் வீட்டு மனை மற்றும் புதிய கட்டிடங்களுக்கான வரைபட ஒப்புதல் அளிக்க பொறியாளர் கட்டமைப்பு உருவாக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் 8 ஊராட்சிகளுக்கு ஒரு உதவி பொறியாளர் என்ற வீகிதத்தில் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கான நிரந்தரமாக ஊராட்சிகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

ஊரக வளர்ச்சி துறையில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை கண்காணிக்க பெரிய மாவட்டங்களில் புதிய செயற்பொறியாளர் பணியிடங்கள் உருவாக்க வேண்டும். அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கிடங்குகளில், பல ஆண்டுகளாக ஊதியம் இல்லாமல் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் தினசரி மத்திய, மாநில அரசின் திட்டங்களுக்கு வழங்கப்படும் சிமெண்ட், கம்பி போன்ற கட்டுமான பொருட்கள் விநியோகம் செய்வது, மற்றும் அதற்கான பதிவேடுகளை பராமரிப்பது, பயனாளிகளுக்கான கட்டுமான பொருட்களை தினசரி இணையதளத்தில் பதிவேடு செய்வது போன்ற பணிகளை செய்து வருகின்றனர்.

எனவே இவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவுட்சோர்சிங் முறையில் மத்திய பொது நிதியில் ஊதியம் வழங்க ஆணையிட வேண்டும் என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி பிப்.4ம் தேதி தமிழகம் முழுவதும் அடையாள வேலை நிறுத்தபோராட்டம் நடைபெறவுள்ளது. இதில் தமிழகத்தில் உள்ள 1350 ஊரக வளர்ச்சி பொறியாளர்கள் பங்கேற்பார்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

# தூய்மைப் பணியாளர் பத்மாவுக்கு தங்கச் சங்கிலி வழங்கி கவுரவித்த ரஜினிகாந்த்!



சென்னை, பிப்.4-

தூய்மைப் பணியாளர் பத்மாவின் நேர்மையை பாராட்டி நடிகர் ரஜினிகாந்த் தங்கச் சங்கிலி வழங்கி அவரை கவுரவித்தார்.

சென்னை திருவல்லிக்கேணி, பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்தவர் பத்மா (48), தூய்மைப் பணியாளர். இவர் தி.நகரில், வண்டிக்காரன் பகுதியில் கடந்த மாதம் 11ம் தேதி பணியில் ஈடுபட்டிருந்தபோது, சாலையில் கிடந்த பையை எடுத்துப் பார்த்துள்ளார்.

அதில், 45 பவுன் தங்க நகைகள் இருந்துள்ளது. உடனடியாக, நகையை பாண்டி பஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். விசாரணையில், அந்த நகைகள் நங்கநல்லூரை சேர்ந்த பரமேஷ் (46) என்பவருக்கு சொந்தமானது என தெரிய வந்தது.

மேலும், மீட்கப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. குப்பையில் கிடந்த நகையை காவலர்களிடம் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் பத்மாவுக்கு பாராட்டுகள் குவிந்தன. இந்த தகவல் அறிந்த முதல்வர் ஸ்டாலினும் பத்மாவை பாராட்டி ரூ.1 லட்சத்துக்கான காசோலையை அவரிடம் வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை மத்திய கோட்டத்தில் முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகம் சார்பில் 'மை ஸ்டாம்பில்' பத்மாவின் ஃபோட்டோவுடன் அஞ்சல் தலை வெளியிட்டு கவுரவப்படுத்தியது.

இதனிடையே, இன்று நடிகர் ரஜினிகாந்த், தூய்மைப் பணியாளர் பத்மாவை நேரில் அழைத்து பாராட்டி கவுரவித்துள்ளார். மேலும், தங்கச் சங்கிலியையும் ரஜினிகாந்த் பரிசளித்துள்ளார்.

இது தொடர்பாக நடிகர் ரஜினியின் பிஆர்ஓ வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்: "முன்களப் பணியாளரான பத்மாவின் செயலை அங்கீகரித்து, அவருக்கு நடிகர் ரஜினிகாந்த் தங்கச் சங்கிலி அணிவித்து கவுரவித்துள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாஜக தேர்தல் சுற்றுப் பயண பொறுப்பாளர் பணி அண்ணாமலை திடீர் விலகல்!



சென்னை, பிப்.4-

சிங்காநல்லூர், விருகம்பாக்கம் உள்ளிட்ட 6 தொகுதிகளின் தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து விலகுவதாக தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை திடீரென அறிவித்துள்ளார். தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர்களை நியமித்து அறிவித்தார். அதன்படி, ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் 2 முதல் 7 தொகுதிகள் வரை ஒதுக்கப்பட்டிருந்தன.

அதில், அண்ணாமலைக்கு கோவை சிங்காநல்லூர், மதுரை தெற்கு, சென்னை விருகம்பாக்கம், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், குமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 6 தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர் பணி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அண்ணாமலை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவையில் இன்று (பிப்.3) காலை செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை கூறியதாவது: வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடுவேனா என்று தெரியவில்லை. அதற்கு காலம் தான் பதில் சொல்லும். கட்சி மேலிடம் முடிவு செய்யும். மேலும், எனது தந்தையின் உடல்நிலை சரியில்லாததால் சிங்காநல்லூர், காரைக்குடி உள்ளிட்ட 6 தொகுதிகளின் பாஜக தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து நான் விலகுகிறேன். இது குறித்து கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரனிடமும் தெரிவித்திருக்கிறேன்.

அண்மையில் தாக்கலான மத்திய பட்ஜெட் யாரும் குறை சொல்ல முடியாதளவுக்கு உள்ளது. குறு சிறு நடுத்தர நிறுவனங்களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டுமே மத்திய பட்ஜெட் பெரிதாகிக் கொண்டே இருக்கிறது.

தமிழகத்தில் நடந்த அண்ணாவின் ஆட்சிக்கும், தற்போதைய திமுக ஆட்சிக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா?. அண்ணாவின் குடும்பம் இன்று எப்படி இருக்கிறது என்று யாருக்காவது தெரியுமா?. அவர்கள் யாரும் அரசியல் பக்கம் வருவதே இல்லை. இப்போதைய சூழலில், அண்ணா என்ற பசு மாட்டின் மீது நிற்கும் காகம் தான் திமுக ஆட்சி. திமுக மீதான வெறுப்பு திராவிட சித்தாந்தத்துக்கு எதிரானதாக மாறி வருகிறது

மேலும், திமுக காங்கிரஸ் கூட்டணி உடைந்த கண்ணாடி. ஸ்டாலின் என்ன சொன்னாலும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி 'கெட் இன்' தான்.

அதுபோல், தமிழகத்தில் அதிமுக தலைமையில் தான் தேசிய ஜனநாயக கூட்டணி களம் காண்கிறது. எடப்பாடி பழனிசாமி தான் எங்களின் முதல்வர் வேட்பாளர்.

தொண்டர்களிடம் கைத்தட்டல், விசில் வாங்க வேண்டும் என்கிற அடிப்படையில் தான் விஜய் பேசுகிறார். இதுவரை கட்சிகள் செய்யாத என்ன திட்டத்தை கொண்டு வரப் போகிறோம் என்று மக்களை சிந்திக்க வைக்கும் வகையில் விஜய் எதுவும் பேசவில்லை. அவரின் பேச்சைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. விஜய் வெளியே வந்து வீதி வீதியாக பிரச்சாரம் செய்து மக்கள் ஏற்று கொண்டால் பார்க்கலாம். இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

# எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 9 மீனவர்களை விடுதலை செய்தது இலங்கை நீதிமன்றம்



கொழும்பு, பிப்.4-

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 9 மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது. டிச.28ல் மண்டபம் மீனவர்கள் 3 பேர், ஜன.3ல் மயிலாடுதுறை மீனவர்கள் 9 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. மண்டபம் மீனவர்கள் 2 பேரையும், மயிலாடுதுறை மீனவர்கள் 7 பேரையும் இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. 3 மீனவர்களுக்கு 6 மாத சிறை தண்டனையும் ரூ.40 லட்சம் அபராதம் விதித்து இலங்கை கோர்ட் உத்தரவிட்டுள்ளது.




# தவெக விழாவில் முருகனை இழிவுபடுத்தி பாடல் நடிகர் விஜய் மீது நடவடிக்கை

## போலீஸ் கமிஷனரிடம் இந்து முன்னணி புகார்

நெல்லை, பிப்.4-

தவெக 3ம் ஆண்டு துவக்க விழாவில் தமிழ் கடவுள் முருகனை இழிவுபடுத்தி பாடல் பாடிய பாடகர், தவெக தலைவர் விஜய் மற்றும் நிர்வாகிகள் மீது வழக்குப் பதிவுசெய்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெல்லை மாநகர போலீஸ் கமிஷனரிடம் இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக இந்து முன்னணியின் மாநில செயலாளர் குற்றாலநாதன் நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் மணிவண்ணனிடம் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: தமிழக வெற்றி கழகம் 3வது ஆண்டு துவக்க விழா நிகழ்ச்சியை சமூக வலைதளத்தில் பார்த்து கொண்டிருந்தேன்.

அப்போது அந்த நிகழ்ச்சியில் தமிழ் கடவுள் முருகனின் பக்தி பாடலான மருதமலை மாமணியே முருகையா என்ற பாடலை குகனே வேலையா என்று பாடுவதற்கு பதிலாக ''வருவாய் எங்கள் தளபதியே வருவாய் வெற்றிக்கழகமே'' என பாடகர் வேல்முருகன் பாடியுள்ளார். முருகனின் பாடலை இழிவு படுத்தியது முருக பக்தர்கள் மனதை புண்படுத்தி உள்ளது. இதற்கு காரணமான நடிகர் விஜய், புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜூன், பாடகர் வேல்முருகன் ஆகியோர் மீது முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாடெங்கும் வரவேற்பைப் பெற்ற அரசம்பட்டி தென்னங்கன்று

கிருஷ்ணகிரி, பிப்.4-

தென்னங்கன்று வளர்ப்பது என்பது மிகவும் சவாலான முறை. நல்ல தாய் மரத்திலிருந்து விளைந்த திடமான காயை தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கு சரியான மண் வளத்தை அளிக்க வேண்டும். அதோடு, பருவத்துக்கு ஏற்ப தேவையான உரம், நீர், பூச்சி / நோய் மேலாண்மை என பக்குவமாக கவனித்து வளர்த்தால் மட்டுமே தென்னங்கன்று நமக்கு முழு பலன் அளிக்கும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரில் 40 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இம்மரங்களில் ஆண்டுக்கு சுமார் 5 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த தென்னை மரங்களை நம்பி தேங்காய் மண்டிகளும், துடைப்பம், நார் தயாரிக்கும் சிறு தொழில்களும், கொப்பரை, தென்னை ஓடு பதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் மூலம் சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை வளர்ப்பு மற்றும் அதனை சார்ந்த தொழில்களில் இவ்வளவு பேர் ஈடுபட்டிருக்கும் நிலையில், அரசம்பட்டி தென்னங்கன்று உற்பத்தி தனிக்கவனம் பெற்றிருக்கிறது.

# இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுகிறார்

## சபாநாயகர் அப்பாவு பேட்டி



நெல்லை, பிப்.4-

இந்திய அரசியலமைப்புச்சட்டத்தை மதிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுகிறார் என்று சபாநாயகர் அப்பாவு குற்றம் சாட்டியுள்ளார். நெல்லையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், "இந்திய வெளியுறவுக் கொள்கையை அமெரிக்காவே தீர்மானிக்கிறது. இது போன்ற மோசமான நிலை இதுவரை இருந்ததில்லை. பெட்ரோல், டீசலை யாரிடம் இந்தியா வாங்க வேண்டும் என்பதை அமெரிக்கா தீர்மானிக்கிறது?. இந்தியாவின் மோசமான வெளியுறவுக் கொள்கையால், இந்திய தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அண்டை நாடுகள் இந்தியாவுடன் இணக்கமாக இல்லை. சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் ஆளுநர் ஸி.ழி.ரவியின் செயல்பாடுகளை பாஜக அரசு ரசிக்கிறது. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் நோக்கத்தோடு ஆளுநர் ஆர்.என். ரவி செயல்படுகிறார். பல்கலைக்கழக விதிமுறைகள் குறித்து ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதுவும் தெரியவில்லை. இந்திய அரசியலமைப்புச்சட்டத்தை மதிக்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி செயல்படுகிறார். சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தருவது இல்லை."இவ்வாறு தெரிவித்தார்.

# உழைத்து மக்கள் ஈட்டும் பணத்தை மோடி அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு விற்றுவிட்டார்

## ராகுல் காந்தி பேட்டி



டெல்லி, பிப்.4-

அமெரிக்க அரசின் கடும் அழுத்தம் காரணமாகவே வர்த்தக ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி ஒப்புதல் அளித்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். முன்னதாக மக்களவையில் மீண்டும் இந்தியா சீனா விவகாரம் குறித்து ராகுல் காந்தி பேசியதற்கு ஆளுங்கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. ராகுல் காந்தியை பேச விடாமல் பாஜக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். அத்துடன் எதிர்க்கட்சியினர் முழக்கங்களை எழுப்பினர். இதனால் அவை ஒத்திவைக்கப்பட்ட நிலையில், செய்தியாளர்களை சந்தித்த ராகுல் காந்தி, பிரதமர் மோடி நாட்டை விற்றுவிட்டதாக கூறினார். அதில், "அமெரிக்காவின் கடும் அழுத்தம் காரணமாகவே வர்த்தக ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி ஒப்புக்கொண்டுள்ளார்.

அதானி மீது அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளதால் வர்த்தக ஒப்பந்தத்தில் மோடி கையெழுத்திட்டுள்ளார். உழைத்து மக்கள் ஈட்டும் பணத்தை மோடி அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு விற்றுவிட்டார். நாட்டின் நலனில் பிரதமர் மோடி சமரசம் செய்துவிட்டார். அவர் அமெரிக்காவிடம் நாட்டை விற்றுவிட்டார். எப்ஸ்டீன் ஆவணங்கள் விவகாரத்தில் என்ற நடந்தது என்பதை அறிய நாடு விரும்புகிறது. வர்த்தக ஒப்பந்த விவகாரத்தில் பிரதமர் மோடி பதற்றம் அடைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரைக் கூட நாடாளுமன்றத்தில் பேச விடுவது இல்லை. நாட்டின் முக்கிய பிரச்சனை குறித்து அவையில் பேச அனுமதி மறுப்பது ஏன்?. சீன விவகாரம் குறித்து பேசிய நான் ஏன் தடுக்கப்பட வேண்டும்," இவ்வாறு பேசினார்.

# இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம்: ட்ரம்ப்பின் அறிவிப்பும் பின்னணியும்



புதுடெல்லி, பிப்.4-

இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாகவும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த பிரதமர் மோடி ஒப்புக்கொண்டதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அவரது அறிவிப்பை அடுத்து இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடியுடன், அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் உரையாடினார். இந்த தொலைபேசி உரையாடலை முதலில் தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்ட இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர், ''நான் பலமுறை கூறியது போல, அதிபர் ட்ரம்ப் பிரதமர் மோடியை உண்மையாகவே ஒரு சிறந்த நண்பராகக் கருதுகிறார்! வர்த்தக ஒப்பந்தம் குறித்த செய்தியை இன்று மாலை கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவில் வரம்பற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன'' என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக ஊடக பதிவில், ''பிரதமர் நரேந்திர மோடி உடன் மேற்கொண்ட உரையாடலை எண்ணி பெருமை கொள்கிறேன். எனது அருமை நண்பர்களில் அவர் ஒருவர். வலிமையான மற்றும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவர். வர்த்தகம், ரஷ்யா உக்ரைன் போர் என பல்வேறு விஷயங்கள் குறித்து நாங்கள் பேசினோம்.

ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக அவர் உறுதி அளித்தார். மேலும், அமெரிக்கா மற்றும் வெனிசுலாவில் இருந்து எண்ணெய் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார். நிச்சயம் இந்த நகர்வு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரும்.

பிரதமர் மோடி உடனான நட்பு மற்றும் நான் கொண்டுள்ள மதிப்பு காரணமாக அவரது கோரிக்கையை ஏற்று வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்து முடித்துள்ளோம். அந்த வகையில் பரஸ்பர வரி விதிப்பு 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்படும். பதிலுக்கு அமெரிக்க பொருட்களுக்கான தனது வரி மற்றும் வரி இல்லாத தடைகளை இந்தியா பூஜ்ஜியமாகக் குறைக்கும்.

500 பில்லியன் டாலர் மதிப்பிலான தொழில்நுட்பம், வேளாண், நிலக்கரி மற்றும் பல பொருட்களை அமெரிக்காவில் இருந்து பெறுவதாக பிரதமர் மோடி உறுதி அளித்தார். இந்தியாவுடனான உறவு முன்பை விடவும் வரும் நாட்களில் வலுவாக இருக்கும்'' என ட்ரம்ப் தெரிவித்தார்.

ட்ரம்ப் உடனான தொலைபேசிய உரையாடல் தொடர்பாக பிரதமர் மோடி தனது சமூக ஊடக பதிவில், ''இன்று எனது அன்பு நண்பர் அதிபர் ட்ரம்புடன் பேசியது மகிழ்ச்சி அளிக்கிறது. 'மேட் இன் இந்தியா' தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 18 சதவீதமாக குறைப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த அற்புதமான அறிவிப்புக்காக இந்தியாவின் 140 கோடி மக்கள் சார்பாக அதிபர் டிரம்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளும் இணைந்து செயல்படும்போது, அது நமது மக்களுக்குப் பயனளிக்கும். பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கான மகத்தான வாய்ப்புகளை இது திறக்கிறது. அதிபர் ட்ரம்ப்பின் தலைத்துவம், உலக அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது. அமைதிக்கான அவரது முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவை அளிக்கிறது. இந்த கூட்டாண்மையை முன்னெப்போதும் இல்லாத உயரங்களுக்கு கொண்டு செல்ல அவருடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்'' என தெரிவித்திருந்தார்.

எனினும், இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டதாக பிரதமர் மோடி உறுதிப்படுத்தவில்லை. பிரதமர் மோடியின் பதிவை அடுத்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது பதவில் இதனை உறுதிப்படுத்தினார். அவர் தனது பதிவில், ''இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டியுள்ளன. இது இரு நாட்டு மக்களுக்கும் தொழில்களுக்கும் பயனளிக்கும் ஒரு ஒப்பந்தம்'' என தெரிவித்திருந்தார். இதன் மூலம் இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது தெரியவந்துள்ளது.

# “அரசியலில் நடிப்போரை மக்கள் ஏற்க மாட்டார்கள்” ராஜேந்திர பாலாஜி

சிவகாசி, பிப்,4-

“நடிகராக இருந்து அரசியலுக்கு வந்த எம்ஜிஆர் அரசியலில் நடிக்கவில்லை. இன்று வரக்கூடிய நடிகர்கள் அரசியலிலும் நடிக்கிறார்கள். அரசியலில் நடிப்பவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்” என அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.




சிவகாசியில் முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் ராஜேந்திர பாலாஜி கூறியது: “காங்கிரஸ் ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட பிரதமர் மோடி பிரதமர் ஆன பின்னர்தான் தமிழகத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனால்தான் மத்திய பட்ஜெட்டை அதிமுக வரவேற்கிறது. அதிமுக எப்போதும் யாருக்கும் அடிமை கிடையாது.

தமிழகத்தில் மீறிப் பேசும் திமுக, டெல்லிக்கு சென்றால் தங்களை காப்பாற்றிக் கொள்ள மத்திய அரசுக்கு அடிபணிந்து போவதை வழக்கமாக வைத்துள்ளது. அதிமுக பாஜக அன்பான கூட்டணி, திமுக காங்கிரஸ் வைத்துள்ளதுதான் அடிமைக் கூட்டணி. அனைத்து கருத்து கணிப்புகளிலும் அதிமுக கூட்டணி முன்னணியில் இருப்பதாக வந்து கொண்டிருக்கின்றன. இதை பொறுக்க முடியாதவர்கள் ஊழல் கட்சி எனக் கூறி வருகின்றனர்.

நடிகராக இருந்து அரசியலுக்கு வந்த எம்ஜிஆர் அரசியலில் நடிக்கவில்லை. இன்று வரக்கூடிய நடிகர்கள் அரசியலிலும் நடிக்கிறார்கள். அரசியலில் நடிப்பவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ரூ.200 டிக்கெட்டை ரூ.2,000க்கு விற்பனை செய்து சம்பாதித்தவர்கள், ஊழல் குறித்து பேசுகின்றனர்.

பட்டாசு, தீப்பெட்டிக்கு ஜி.எஸ்.டி வரியை குறைக்க வைத்தது அதிமுக. மத்திய அரசுடன் இணக்கமாக இருந்து மக்களுக்கு வேண்டிய திட்டங்களை பெறும் முதல்வர் தான் தமிழகத்துக்கு தேவை” என்றார்.

# ஓபிஎஸ் மவுனத்தால் அதிமுகவுக்கு தாவும் சிவகங்கை தொண்டர்கள்!

சிவகங்கை, பிப்.4-

ஓபிஎஸ் மவுனத்தால் சிவ கங்கை மாவட்டத்தில் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தினர், அதிமுகவுக்கு தாவத் தொடங்கியுள்ளனர்.




அதிமுகவிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கியதும் தனது செல்வாக்கை நிரூபிக்க பழனிசாமி முடிவு செய்தார். அதற்காக அவர் ஓபிஎஸ்க்கு ஆதரவாளர்கள் அதிகமுள்ள தென்மாவட்டமான சிவகங்கையில் கடந்த 2023 மார்ச்சில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்தை நடத்தினார்.

ஆனால், பொதுக் கூட்டத்துக்கு முந்தைய நாள் சிவகங்கைக்கு பழனிசாமி வருவதைக் கண்டித்து பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை ஓபிஎஸ் ஆதரவாளர்கள் நடத்திக் காட்டினர். ஓபிஎஸ் அணியில் அப்போதைய கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த மருது அழகுராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏற்கெனவே ஓபிஎஸ் தரப்பு சென்னையில் அதிமுக தலைமை அலுவலகத்தைக் கைப்பற்றிய போது சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பலர் ஆதரவாக இருந்தனர். அந்தளவுக்கு ஓபிஎஸ்க்கு சிவகங்கை மாவட்டத்தில் அதிக ஆதரவாளர்கள் உள்ளனர்.

இந்நிலையில், `அதிமுகவை மீட்போம்' என்ற சபதத்துடன், அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் கழகத்தை ஓபிஎஸ் தொடங்கியும் எந்தவிதப் பலனும் இல்லை. ஓபிஎஸ்க்கு பக்கபலமாக இருந்த மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், மருது அழகுராஜ் உள்ளிட்டோர் திமுகவில் இணைந்தனர். ஓபிஎஸ்ன் நம்பிக்கைக்குரிய ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தர்மர் எம்.பி.யும் மீண்டும் அதிமுகவிலேயே இணைந்தார். சமீபத்தில் அதிமுகவில் இணையத் தயாராக இருப்பதாக ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தும், அதை பழனிசாமி ஏற்கவில்லை.

அதன் பின்னரும் தனது அரசியல் நிலைப்பாடு குறித்து ஓபிஎஸ் மவுனம் காத்து வருகிறார். இதனால் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து குழப்பத்தில் உள்ளனர். இதைப் பயன்படுத்தி சிவகங்கை மாவட்ட அதிமுக நிர்வாகிகள், ஓபிஎஸ் ஆதரவாளர்களை தங்கள் பக்கம் இழுக்கும் பணியில் இறங்கியுள்ளனர்.

அதிமுக மாவட்டச் செயலாளர் பி.ஆர். செந்தில்நாதன் எம்.எல்.ஏ. முன்னிலையில் இளையான்குடி தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தினர் நேற்று அதிமுகவில் இணைந்தனர்.

இது குறித்து அதிமுகவில் இணைந்த ஓபிஎஸ் அணியைச் சேர்ந்த சிலர் கூறுகையில், ‘ஓபிஎஸ்க்கு ஆதரவாக இருந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மருதுஅழகுராஜ் உள்ளிட்டோர் திமுகவில் சேர்ந்தாலும், நாங்கள் தாய்க் கழகமான அதிமுகவில் சேரத்தான் விருப்பமாக இருந்தோம்.

மேலும் ஓபிஎஸ்ம் தனது அரசியல் நிலைப்பாட்டை விரைந்து எடுக்காமல் தாமதப்படுத்தி வருகிறார். இதனால், அவரை நம்பிப் பயனில்லை என்பதால் அதிமுகவில் இணைந்தோம். தொடர்ந்து பலர் அதிமுகவில் சேர உள்ளனர்’ என்றனர்.



# தலித் கிறிஸ்துவ மக்கள் பயன்பாட்டிக்கு மயான வசதி அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு

சின்னாளபட்டி, பிப்.4-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், என்.பஞ்சம்பட்டியில் உள்ள 2வார்டு புனித அந்தோணியார் தெருவில் தலித் கிறிஸ்துவ (ஆதிதிராவிடர்) சமுதாய மக்கள் அதிகம் வசிக்கின்றனர். இதுபோல பெரியார் நகரிலும் உள்ளனர். தலித் கிறிஸ்துவ சமுதாய மக்கள் தங்களுக்கு தனி மயான வசதி வேண்டுமென ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தலித் கிறிஸ்துவ சமுதாய மக்கள் வசதிக்காக தனி மயானத்திற்கு இட வசதி ஏற்படுத்திக் கொடுத்தார். இதை கேள்விப்பட்டவுடன் என்.பஞ்சம்பட்டியைச் சேர்ந்த புனித அந்தோணியார் தெரு மற்றும் பெரியார் நகரைச் சேர்ந்த பொதுமக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து அவருக்கு சால்வை அணிவித்து கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதியைப் பொறுத்த வரை அனைத்து சமுதாய மக்களுக்கும் நலத்திட்டங்களை பாகுபாடின்றி செய்து வருகிறேன். குறிப்பாக தலித் சமுதாய மக்கள் எந்த உதவி, எந்த கோரிக்கை வைத்தாலும் என்னை எப்போதும் தொடர்பு கொள்ளலாம் என்பதுடன் இன்று இவர்களுக்கு மயான வசதி மட்டும் செய்து கொடுக்கவில்லை. அதற்கு தேவைப்படும் தார்ச்சாலை வசதி, தண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி உட்படட அனைத்தும் செய்து கொடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், பிலால் உசேன், ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் முதல் தரவரிசையை வென்றார் ஜிப்மர் முன்னாள் மாணவி!

புதுச்சேரி, பிப்.4-

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு 2025ல் (டிசம்பர் 2025ல் நடைபெற்றது) அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய தரவரிசை 1ஐ ஜிப்மர் நிறுவனத்தின் முன்னாள் மாணவி டாக்டர் ராஜலெக்ஷ்மி வென்றுள்ளார்.



டாக்டர் ராஜலெக்ஷ்மி, ஜிப்மரில் எம்பிபிஎஸ் படிப்பை கடந்த 2015ல் முடித்தார். பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ். (20222024) பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக (Senior Resident) பணியாற்றினார்.

முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில் டாக்டர் ராஜலெக்ஷ்மி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்று அதற்காக தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் ராஜலெக்ஷ்மி தற்போது, நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறையில் (MCh Surgical Oncology) மேற்படிப்பைத் தொடர திட்டமிட்டுள்ளார் என்று ஜிப்மர் தெரிவித்துள்ளது.



■ சென்னிமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் தைப்பூச தேர் திருவிழா மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவில் செய்தித் துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன், வீட்டு வசதி வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட ஆட்சியர் கந்தசாமி ஐஏஎஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா ஐபிஎஸ் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் தேர் வடம் பிடித்து தொடங்கி வைக்க, திரளான பக்தகோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை போராட்டம் ஓயாது

## கௌரவ விரிவுரையாளர்கள் போராட்டம் தொடரும்

சென்னை, பிப். 4-

உயர்கல்வித் துறைச் செயலருடன் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எவ்வித உத்தரவாதமும் கிடைக்காததால், போராட்டத்தைத் தொடரப் போவதாகக் கௌரவ விரிவுரையாளர்கள் கூட்டமைப்பு (யிகிசிநிலிகி) அறிவித்துள்ளது.

கோரிக்கைகள் குறித்து நிதித்துறை மற்றும் முதல்வரின் தனிச்செயலாளருடன் கலந்தாலோசித்த பின்னரே, அரசின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் எனச் செயலர் கூறியுள்ளார். அரசின் இந்த மழுப்பலான பதிலால் அதிருப்தியடைந்த JACG-LA, "கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை போராட்டம் ஓயாது" எனத் தெரிவித்துள்ளது.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோவிலில் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு, சண்முகருக்கு அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



# தென்காசி பள்ளி மானவர்கள் நேஷனல் ஸ்கேட்டிங் சர்வதேச போட்டிக்கு தகுதி

தென்காசி, பிப்.4-

தென்காசி மாவட்டம் புளியங்குடி, வாசுதேவநல்லூர் ராயகிரி ஆகிய பகுதிகளை சேர்ந்த பள்ளி மாணவர்கள் 7 பேர் கோவாவில் நடைபெற்ற நேஷனல் ஸ்கேட்டிங் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் சுகர்ஷினிகுகா (7) இரண்டு தங்கமும், தேவ்ரக்சன்(12) தங்கம், வெள்ளி இரண்டு பதக்கங்களையும், விஷ்வா முகுந்தன் (12) கவின் (12) பிரணவ் மிருதுன் (12) சுதன் (15) மனோஜ் (15) உள்ளிட்ட மாணவர்கள் வெங்கலம், வெள்ளி பதக்கம் சான்றிதல் பெற்றுள்ள நிலையில்,

மேலும் தொடர்ந்து இந்தோனேசியாவில் வரும் பிப். 1 அன்று நடைபெறும் சர்வதேச ஸ்கேட்டிங் போட்டிக்கு தகுதி பெற்று இந்தியாவிற்கு பெறுமை சேர்த்துள்ள மாணவர்களுக்கு புளியங்குடி நகராட்சி துணை சேர்மன் அந்தோனிச்சாமி, தொழிபர்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்து புத்தகம் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# மீண்டும் சூடுபிடிக்கும் கப்பலூர் சுங்கச் சாவடி பிரச்சினை மதுரையில் நடப்பது என்ன?

மதுரை, பிப்.4-

சட்டப்பேரவைத்தேர்தல் நெருங்கும்நிலையில் மதுரை கப்பலூர் சுங்கச்சாவடியை இடமாற்றக் கோரி அடுத்தகட்ட போராட்டம் நடத்துவது தொடர்பாக திருமங்கலத்தில் சுங்கச்சாவடி எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது.




கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது மதுரை ஒத்தக்கடையில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின், திமுக ஆட்சிக்கு வந்ததும் கப்பலூர் சுங்கச்சாவடி அகற்றப்படும் என வாக்குறுதி அளித்தார். அக்கூட்டத்தில், சுங்கச்சாவடியால் மக்கள், வாகன ஓட்டிகள், விபத்தில் சிக்குவோர் அன்றாடம் படும் சிரமங்களை ஒரு குறும்படம் மூலம் பார்வையாளர்களுக்குப் போட்டுக்காட்டி ஸ்டாலின் கவலை தெரிவித்திருந்தார்.

அதனால், திமுக ஆட்சிக்கு வந்ததும் இந்த சுங்கச்சாவடி அகற்றப்படும் அல்லது இடமாற்றம் செய்யப்படும் என்று தென் மாவட்ட மக்கள் நம்பினர். ஆனால், திமுக ஆட்சி நிறைவுபெறும்நிலையில் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கிவிட்டது.

இந்நிலையில் வழக்கம்போல் திமுக, அதிமுக மற்றும் பிற கட்சிகள் திருமங்கலம் தொகுதிக்குள், ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால்....’ என்று சுங்கச்சாவடி பற்றி வாக்குறுதி அளிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், சுங்கச்சாவடி எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் குழுவினர் யார் வாக்குறுதியையும் நம்பாமல் வரும் 5ம் தேதி திருமங்கலத்தில் அடுத்தகட்டப் போராட்டத்துக்கும், சட்டப்பேரவைத் தேர்தலில் எடுக்க வேண்டிய முடிவுகள் பற்றியும் ஆலோசிக்க உள்ளதாகத் தெரிவித்தனர்.

இது குறித்து அக்குழுவினர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் "கப்பலூர் சுங்கச்சாவடியை இடமாற்றக் கோரி கடந்த 15 ஆண்டுகளாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம்.

சுங்கச்சாவடி அமைந்துள்ள திருமங்கலம் தொகுதி மக்களுக்கு நிரந்தரத்தீர்வு வேண்டி சிறப்பு ஆலோசனைக் கூட்டம் வரும் 5ம் தேதி (வியாழக்கிழமை) இரவு 7 மணியளவில் திருமங்கலம் தனியார் மண்டபத் தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும்," என அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

‘வேட்பாளரை நிறுத்துவோம்’ போராட்டங்களுக்குப் பிறகு மதுரை ஆட்சியர், மக்கள் பிரதிநிதிகள் எடுக்கும் எந்த ஒரு முடிவும் தற்காலிக நிவாரணமாகவே உள்ளன. இந்தச் சுங்கச்சாவடியை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற எங்களின் கோரிக்கை இன்னும் அப்படியே உள்ளது.

கடந்த தேர்தலில் நம்பி ஏமாந்துவிட்டோம். இந்த முறை அவ்வளவு எளிதாக விடப்போவதில்லை. கடந்த 4 ஆண்டுகளாக பலமுறை முதல்வரைச் சந்திக்க அனுமதி கேட்டும் கடைசி வரை கிடைக்கவில்லை.

அதனால், அரசியல் கட்சியினருக்கு மக்களின் வலியைப் புரிய வைக்க, எங்கள் போராட்டக்குழு சார்பில் வேட்பாளரை நிறுத்தப் போகிறோம். அப்போதுதான் இப்பிரச்சினைக்கு முடிவு கிடைக்கும், என சுங்கச்சாவடி எதிர்ப்புக் குழுவினர் தெரிவித்தனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தலைமையில் புதியதாக வாக்குச்சாவடிகள் ஏற்படுத்துதல், மாற்றம் செய்தல் மற்றும் மறுசீரமைத்தல் தொடர்பாக அனைத்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கருத்து கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



■ சென்னிமலையில் நடைபெற்ற தைப்பூச திருவிழாவில், நமது தேசிய இந்து திருக்கோயில் பவுண்டேசன் ழிபிஜிதி ஈரோடு மாவட்டம் சார்பில், கலந்து கொண்டு சுமார் 15 அடியார்கள் பணி செய்தனர். அவர்களுக்கு கோவில் செயல் அலுவலர் கி.ரி.சரவணன், கண்காணிப்பாளர் மாணிக்கம் அவர்களும் வந்திருந்த அடியார் பெருமக்களுக்கு பணி நிறைவடைந்தவுடன், பிரசாத பை குடுத்து மகிழ்ச்சியுடன் வழி அனுப்பி வைத்தனர்.

# தமிழக கல்வி மற்றும் விளையாட்டுத்துறை இந்திய அளவில் முதன்மை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு



சின்னாளபட்டி, பிப்.4-

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி, தேவாங்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த கால்பந்தாட்ட விளையாட்டு வீராங்கனைகள் முதல்வர் கோப்பைக்காக 17 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான தஞ்சாவூரில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்கள். விளையாட்டு விடுதி மாணவிகளுடன் நடைபெற்ற போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றனர். இவர்களுக்கான பாராட்டு விழா பள்ளி வளாகத்தி;ல் நடைபெற்றது. விழாவிற்கு தமிழ்நாடு கால்பந்தாட்ட மாநில தலைவரும் சிறந்த நன்கொடையாளருமான அரசன் எஸ்.சண்முகம் தலைமை தாங்கினார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் முருகேசன், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமையாசிரியை விநாயகஜெயந்தி வரவேற்று பேசினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது, இந்த பள்ளி மலைக்கிராமத்தில் இருந்து வரும் மாணவிகளின் கல்விக்காக தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. விடுதி வசதியும், கூடுதல் வகுப்பறைகளையும் கேட்டுள்ளார்கள். விரைவில் அதற்கான பணிகள் தொடங்கும் என்றதோடு, இந்திய அளவில் தமிழக கல்வித்துறை மற்றும் விளையாட்டுத் துறை பேசப்படுகிறது. கிராமப்புற விளையாட்டு வீரர்கள் கூட உலகளவில் சாதனை படைத்து வருகிறார்கள். அதற்கு காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பான திட்டங்களும், துணை முதல்வரின் சிறப்பான செயல்பாடுகளும்தான் என்றார். அதன் பின்னர் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கிவிட்டு நிதி உதவியும் வழங்கினார். வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகள் பிப்ரவரி 14ம் தேதி ராணிப்பேட்டையில் நடைபெறும் 14 வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் திண்டுக்கல் கையுந்து பந்து, கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட கால் பந்தாட்ட கழக துணை செயலாளார்கள் இசாக், தங்கத்துரை, திமுக மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, முன்னாள் பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர். முருகன், வார்டு உறுப்பினர்கள் ரவிக்குமார், வேல்விழி மற்றும் பேரூர் கழக வார்டு செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றிய 106 வது அமைப்பு தின கொண்டாட்டம்

சென்னை, பிப்.4-

திருவல்லிக்கேணி, நீலி வீராச்சாமி தெருவில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மையக் கட்டிடத்தில் அமைந்துள்ள சிவ இளங்கோ சிலைக்கு மாநிலத் தலைவர் வெ.மகேந்திரகுமார் தலைமையில் மாலை அணிவித்து, ஒன்றிய கட்டிடத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் கொடி ஏற்றப்பட்டது.

அமைப்பு தினத்தை முன்னிட்டு, இணைப்புச் சங்க நிர்வாகிகள் கல்வித்துறையைச் சேர்ந்த ஒன்றியத்தின் மாநில பொருளாளர் திலகர், மருத்துவத் துறையைச் சேர்ந்த ஒன்றியத்தின் துணைத் தலைவர் பிஜே. ரவிக்குமார், சுகாதாரத் துறையை சேர்ந்த ஒன்றியத்தின் துணைத் தலைவர் பத்மினி, கல்வித்துறையைச் சேர்ந்த ஒன்றியத்தின் துணைத் தலைவர் பாலசுப்பிரமணியம் மருத்துவத்துறை சேர்ந்த ஒன்றியத்தின் வடசென்னை மாவட்ட தலைவர் ஏவிஜி.சேகர், ஒன்றியத்தின் கிழக்கு சென்னை மாவட்ட தலைவர் விஜயகுமார், டாஸ்மார்க் துறையைச் சேர்ந்த ஒன்றியத்தின் கடலூர் மாவட்ட தலைவர் அன்பழகன் ஒருங்கிணைந்து கேக் வெட்டி ஒன்றியத்தின் 106 வது அமைப்பு தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில டாஸ்மார்க் ஒன்றிய பணியாளர் செல்வகுமார், கல்வித்துறை அலுவல பணியாளர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் சீனிவாசன் ஒன்றிய பணியாளர் வள்ளி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட தலைவர்கள் தங்களது ஒன்றிய கட்டிடங்களில் , மாவட்ட தலைநகரங்களில் ஒன்றியக் கொடியேற்றி மாநில அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது.




# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம்

தேனி பிப் 4-

,தேனி மாவட்டம் உத்தமபாளையம் களிமேட்டுபட்டியில் குடியிருந்து வரும் சுமார் 158 குடும்பங்களுக்கும், வேறொரு இடத்தில் குடியேற பட்டா வழங்கப்பட்ட நிலையில் அந்த இடத்தை குலாம் மைதீன் மனைவி பாத்திமா மற்றும் நத்தர் மீரான் என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவதை கண்டித்து, அப்பகுதி மக்கள் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சேலம் தேவியாகுறிச்சியில் குறிஞ்சிக் குறவர் சமூக எழுச்சி மாநில மாநாடு கு.மணவாளன் கொடியேற்றி துவக்கி வைப்பு



சேலம், பிப்.4-

சேலம் மாவட்டம் தலைவாசல் தேவியாகுறிச்சியில் குறிஞ்சிக் குறவர் சமூக எழுச்சி மாநில மாநாடு சமுதாயத்தின் மூத்த முன்னோடி அய்யா கு.மணவாளன் கொடியேற்றி மாநாட்டை துவக்கி வைத்தார். கோவை துரைசாமி பெருமாள் வரவேற்புரையற்றினார். மாநாட்டிற்கு தலைமை சிறப்பு விருந்தினராக தமிழக பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை மாநில தலைவர் குறிஞ்சி ப.சந்திரசேகரன் தலைமையில், நிர்வாகிகள் சேர்ந்து வெள்ளி வேல் அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

மாநிலங்களவை உறுப்பினர் ஷிசி. சிவலிங்கம், காங்கேயம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கொங்கு இளைஞர் பேரவை தலைவர் உ.தனியரசு, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி மாநில இளைஞரணி செயலாளரும் , மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஷி.சூரியமூர்த்தி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை சார்பாக கோவை திருப்பூர் ஈரோடு நாமக்கல் கரூர் சேலம் பகுதியைச் சார்ந்த மாநில மாவட்ட மாநகர ஒன்றிய நகர மற்றும் மகளிர் நிர்வாகிகள் 1000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.












# வாடிப்பட்டியில் அண்ணா சிலைக்கு திமுக அமைச்சர் மூர்த்தி தலைமையில் மரியாதை

வாடிப்பட்டி பிப்.04-

அறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேருந்து நிலைய பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு திமுக சார்பில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். முன்னதாக பழையநீதிமன்றத்தில் இருந்து, பேருந்து நிலையம் வரை மௌன ஊர்வலமாக வந்தனர்

இதில் திமுக மாவட்ட அவைத்தலைவர் பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர்கள்

பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், தன்ராஜ் ,பேரூர் செயலாளர்கள் பால்பாண்டி,

சத்தியபிரகாஷ், மனோகரவேல் பாண்டியன், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா, ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன், துணைத் தலைவர்கள் வக்கீல் கார்த்திக், சுவாமிநாதன், நிர்வாகிகள் தனச்செல்வம், சிபி ஆர் சரவணன், விஜயகுமார், முன்னாள் பேரூர் செயலாளர் மு.பா. பிரகாஷ், இளைஞரணி வினோத், அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கும் பணி அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைப்பு



ஈரோடு, பிப்.4-

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 229 எண்ணிக்கையில் 45,221 கீ.மீ நீளத்திற்கு ரூ.20.35 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக தார்சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.ஈரோடு மாநகராட்சிக்குப்பட்ட 4 மண்டலங்களிலுள்ள 60 வார்டுகளில் 841.27

கீ.மீ நீளம் உள்ள சாலை மாநகராட்சியால் பாராமரிக்க பட்டு வருகிறது. இரண்டாவதுகட்டமாக, தற்பொழுது, மாநகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைஉட்கட்ட அமைப்பு திட்டத்தின் கீழ் 229 எண்ணிக்கையில் 45.221 கீ.மீ நீளத்திற்குரூ.20.35 தார்சாலை கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக தார்சாலை அமைக்கும்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

மேலும், 90 எண்ணிக்கையில் 7.36 கீ.மீ

நீளத்திற்கு ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பங்களாக கான்கீரிட் சாலை பணிகளுக்குவேலை ஆணை வழங்கும் நிலையில் உள்ளது.

முதல்கட்டமாக 1,019 சாலைகள் 1076.6 கி.மீ நீளத்திற்கு ரூ.43.0 கோடிமதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 319 சாலைகள் 52.58 கி.மீ.நீளத்திற்கு ரூ.23.19 கோடி மதிப்பீட்டில் பணிக்காக எடுக்க ப்பட்டுள்ளது.இந்நிகழ்வின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமிஇ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு கிழக்குசட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர்நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின்இ.ஆ.ப., ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், துணை ஆணையர்தனலட்சுமி, உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) நிதின் ஹெச்.ஆர். (இ.வ.ப.)உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர். வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000